**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண்.388/2012

நாள்: 05.11.2024

பெயர்: மாசிலாமணி (வா.சா.1) த/பெ: காசிநாதன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

1, 3, 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை...

1) என் தொழில் பால் வியாபாரம் என்றால் நான் முன்பு பால்வியாபாரம் செய்து வந்தேன். தற்போது விவசாயம் பார்த்து வருகிறேன். தாவா 4, 5 பிரதிவாதிகள் எனது பிள்ளைகள். தாவா 4, 5 பிரதிவாதிகளை நான் எதற்காக வழக்கில் சேர்த்தேன் என்றால் சொத்தில் அவர்களுக்கு பங்கு வேண்டுமென்று சேர்த்துள்ளேன். எனக்கும், 4, 5 பிரதிவாதிகளுக்கும் விரோதம் ஏதும் இல்லை. 4, 5 பிரதிவாதிகளை வாதிகளாக ஏன் சேர்க்கவில்லை என்றால் எனக்கு விவரம் தெரியவில்லை. 1ம் பிரதிவாதி முருகேசனுக்கு நான் திருமணம் செய்து வைக்கவில்லை. 2ம் பிரதிவாதி சாமிதுரைக்கு நான் திருமணம் செய்து வைத்தேன். என் மனைவி தவமணி 2008ம் வருடம் காலமானார்.

2) தாவா சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது மாமியார் சாரதாம்பாள் 1952 ல் கிரையம் வாங்கிய சொத்துக்கள் ஆகும். எனது மாமியார் 1973ம் ஆண்டு காலமானார். சாரதாம்பாளுக்கு என் மனைவியும், 2ம் பிரதிவாதி சாமிதுரையும் வாரிசுகள் என்றால் சரிதான். சாமிதுரை வழக்கு நிலுவையில் இருக்கும்போது காலமாகிவிட்டார். சாமிதுரையின் வாரிசுகள் தான் 3, 6 முதல் 8 பிரதிவாதிகள் என்றால் சரிதான். சாமிதுரையின் மகன் 3ம் பிரதிவாதி வெளிநாட்டில் உள்ளார். என் மாமியார் சாரதாம்பாள் இறந்த பிறகு அவரது சொத்தை என் மனைவியும் அவருடைய சகோதரரான சாமிதுரையும் வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டார் என்றால் சரிதான். எப்போது வாய்மொழி பாகம் ஏற்பட்டது என்றால் 1993 வருடம் ஏற்பட்டது. மாதம், தேதி எனக்கு தெரியாது.

3) 1993ம் ஆண்டு பாகம் பிரிந்தது என்று நான் அனுப்பிய வா.சா.ஆ.1 சட்ட

அறிவிப்பிலும், நான் செய்துள்ள வழக்குரையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் என் மனைவிக்கு வாய்மொழியாக பாகம் கிடைத்ததை காட்டுவதற்கு பட்டாவோ, வேறு அனுபவ ஆதரவோ இல்லை என்றால் சரிதான். என்னுடைய மைத்துனர் 2ம் பிரதிவாதி சாமிதுரைக்கு பாகத்தில் கிடைத்த சொத்துக்களை சிலவற்றை நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். 29.07.1999ல் சர்வே எண்.321/8ல் 2ம் பிரதிவாதியிடமிருந்து நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் நான் கிரையம் வாங்கிய ஆவணம் என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.1 (சான்றிட்ட நகல்)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 22.12.2011ல் சர்வே எண்.314/12ல் 2ம் பிரதிவாதியிடமிருந்து நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் நான் கிரையம் வாங்கிய ஆவணம் என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.2 (சான்றிட்ட நகல்)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2ம் பிரதிவாதிக்கும், எனக்கும் பேச்சு வார்த்தை உண்டு என்றால் சரியல்ல. 10 வருடம் காலமாக பேச்சு வார்த்தை இல்லை. 2ம் பிரதிவாதி இறக்கும் தருவாயில்தான் பேசிக்கொண்டோம். 2ம் பிரதிவாதிக்கும், மணி என்பவருக்கும் இடையே ஏற்பட்ட கிரைய உடன்படிக்கையில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது **பி.வா.சா.ஆ3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) தாவா சொத்துக்கள் இரண்டும் சேர்ந்தார்போல்தான் உள்ளது. தாவா சொத்துக்களையும் அதன் கீழ்புற சொத்துக்களையும் பிரித்து காட்ட அத்து எதுவும் இல்லை என்றால் இடையில் உயிர் கள்ளி வேலி உள்ளது. தாவா சொத்துக்களுக்கும் கீழ்புறம் உள்ள சொத்தை 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களுக்கும் வடபுறம் உள்ள சொத்தை 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு பட்டா எண்.459 2ம் பிரதிவாதி பெயரில் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களுக்கு சாரதாம்பாள் பெயரில்

பட்டா இருந்து UDR பட்டா வழங்கியபோது 2ம் பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்டது. தாவா தாக்கல் செய்த காலத்தில் தாவா சொத்துக்களில் நெற்பயிர் பயிரிடப்பட்டிருந்தது. தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியிடமிருந்து வா.சா.ஆ.2ன் மூலமாக கிரையம் வாங்கி விட்டார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தை 2 மற்றும் 3 பிரதிவாதிகள் சேர்ந்துதான் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்தக் கிரைய ஆவணத்தில் தாவா சொத்துக்கள் எவ்வாறு கிடைத்தது என்று 2, 3 பிரதிவாதிகள் சொல்லிதான் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

6) தாவா சொத்துக்களை பொறுத்து வா.சா.ஆ.2 க்கு பிறகு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்பின் தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதிதான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் யாரும் அனுபவம் செய்யவில்லை. தரிசாகதான் உள்ளது. நான் அனுப்பிய சட்ட அறிவிப்பு வா.சா.ஆ.1ற்க்கு 1ம் பிரதிவாதி உரிய பதிலை வா.சா.ஆ.3ன் மூலமாக அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 பரிவர்த்தனை பத்திரம் பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6ல் தாவா சொத்துக்கள் கடடுப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 2ம் பிரதிவாதிக்கும், என் மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட வாய்மொழி பாகத்தில் 2ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. வாய்மொழி பாகப்படி 2ம் பிரதிவாதி அனுபவித்து வந்து 1ம் பிரதிவாதிக்கு உரிய பிரதிபலனை பெற்றுக்கொண்டு 2 மற்றும் 3 பிரதிவாதிகள் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 கிரையம் பெற்ற தேதியிலிருந்து 1ம் பிரதிவாதிதான் நாளது தேதி வரை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 செல்லாது என்று நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.

ஒப்பம்/– திரு.S.கணேஷ், M.Com, M.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்.